# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 24.08.2018

## இந்திய நிகழ்வுகள்

- மத்திய நகர்ப்புற வளர்ச்சி கழகம் நாட்டில் பாதுகாப்பு அம்சங்கள் நிறைந்த நகரங்களின் தரவரிசைப் பட்டியலை (2018) வெளியிட்டுள்ளது.
  - பாதுகாப்பு மற்றும் காவல் அம்சம் நிறைந்த இந்தியாவின் முதல் 5 நகரங்கள்
    1. சாகர் (மத்தியப் பிரதேசம்)
    2. திருப்பதி (ஆந்திரப் பிரதேசம்)
    3. புதுச்சேரி (புதுச்சேரி)
    4. கரீம்நகர் (தெலுங்கானா)
    5. இம்பால் (மணிப்பூர்)

- சத்தீஸ்கர் மாநிலத்தின் புதிய தலைநகரான நயா ராய்ப்பூருக்கு, மறைந்த முன்னாள் பிரதமர் வாஜ்பாய் நினைவாக "அடல் நகர்" என்று பெயர் சூட்டப்பட உள்ளதாக சத்தீஸ்கர் மாநில அரசு அறிவித்துள்ளது.



- தேசிய அளவில் சிறந்த கவிஞர்களுக்கு வாஜ்பாய் பெயரிலான

விருது ஒன்று மாநில அரசின் சார்பாக வழங்கப்படவுள்ளது.

- சத்தீஸ்கர் மாநிலம் தோற்றுவிக்கப்பட்ட நவம்பர் 1ம் நாள், சிறந்து விளங்கும் பஞ்சாயத்து மற்றும் நகர்ப்புறங்களுக்கு வாஜ்பாய் பெயரில் விருதுகள் வழங்கப்பட உள்ளது.



- உலகில் அதிகம் சம்பளம் வாங்கும் நடிகர்கள் பட்டியலை போர்ப்ஸ் பத்திரிக்கை வெளியிட்டுள்ளது. இதில் இந்தியாவைச் சேர்ந்த இந்தி நடிகர்கள் இரண்டு பேர் இடம் பெற்றுள்ளனர்.
    - அக்ஷய் குமார் 7 இடத்திலும், சல்மான்கான் 9வது இடத்திலும் உள்ளனர்.



- 12ம் வகுப்பு முடித்தவர்களும் ஆசிரியர்களாகலாம் என இராஜஸ்தான் துணை மற்றும் அமைச்சக சேவை தேர்வு வாரியம் அறிவித்துள்ளது.
    - தமிழகத்தின் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் போல ராஜஸ்தானில் துணை மற்றும் அமைச்சக சேவை தேர்வு வாரியம் செயல்பட்டு வருகிறது.



- 2013 முதல் 2015 வரையிலான ஆண்டுகளில் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை அடங்கிய அறிக்கை ஒன்றை அரசு வெளியிட்டுள்ளது. இதில் மராட்டிய மாநிலம் முதலிடம் பிடித்துள்ளது. தமிழகம் 8வது இடத்தில் உள்ளது.



- பட்டய கணக்காளர்களுக்கான தேவை அதிகரித்துள்ளதால் தங்கள் உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பினை அதிகரிக்கும் விதமாக இந்திய பட்டய கணக்காளர்கள் சங்கம் (ICAI) செப்டம்பர் 1ம் தேதி CAjobs.com என்கிற இந்த தளத்தினை தொடங்க உள்ளது.
    - இந்த தளத்தினை ஹெச்டிஎப்சி நிறுவனத்தின் துணைத் தலைவர் 'கெகி மிஸ்திரி' தொடங்கி வைக்க உள்ளார்.



## உலக செய்திகள்

- ஆஸ்திரேலியா புதிய பிரதமராக ஸ்காட் மேரிசன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.



- நேபாள தலைநகர் காத்மண்டுவில் இந்த மாதம் 30 மற்றும் 31ம் தேதிகளில் நான்காவது BIMSTEC உச்சி மாநாடு நடைபெறவுள்ளது.




We Shine Academy TM

## விளையாட்டு செய்திகள்

- இந்தோனேஷியாவில் நடைபெற்று வரும் 18வது ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்திய ஆடவர் பிரிவு தங்கம் வென்றுள்ளது.



- உலக அளவில் அதிகம் சம்பாதிக்கும் விளையாட்டு வீராங்கனைகளில் இந்தியாவின் பி.வி.சிந்து (பாட்மிண்டன் நட்சத்திரம்) 7வது இடம் பிடித்துள்ளதாக போர்ப்ஸ் பத்திரிக்கை தெரிவித்துள்ளது.



**முக்கிய தினங்கள்**

- ஆகஸ்ட் 24 - கணினியின் செயல் பொருளான விண்டோஸ் 95 வெளியிடப்பட்ட தினம்.
  - மைக்ரோசாப்ட் நிறுவனம் முதலில் எம் எஸ் டாஸ் என்னும் செயல் பொருளை அறிமுகப்படுத்தியது. அதன் பிறகு அவற்றை மேம்படுத்தி விண்டோஸ் 95 என அழைக்கப்படும் செயல் பொருளை மைக்ரோசாப்ட் நிறுவனம் அறிமுகப்படுத்தியது.



- ஆகஸ்ட் 22 – சென்னை தினம்
    - ஆகஸ்ட் 22, 2018 சென்னை நகரம் உருவான 379வது தினம் ஆகும்.
    - 1639ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பிரான்சிஸ் டே என்ற ஆங்கிலேயர் செயின்ட் ஜார்ஜ் கோட்டை பகுதியை விலைக்கு வாங்கினார். அன்றைய தினமே சென்னையின் தினமாக கருதப்படுகிறது.
    - 1997ம் ஆண்டு மெட்ராஸ் என்பதை சென்னையாக மாற்றி அறிவிக்கப்பட்டது.




**விருதுகள்**

- இங்கிலாந்தின் முன்னாள் கால்பந்து கேப்டன் டேவிட் பெக்காமிற்கு UEFA ஜனாதிபதி விருது (கால்பந்பந்தாட்டத்திற்கான பங்களிப்புக்காகவும், விளையாட்டை ஊக்கமளித்ததற்கும்) வழங்கப்பட்டுள்ளது.